


## 4.1.1 உறவினரையும், அயலவரையும் பேணுவோம்

- உறவினர்களுடனும், அயலவர்களுடனும் இணைந்து வாழ வேண்டும்.
- அவர்களின் உறவைத் துண்டித்து வாழ்வது பாவமாகும்.
- அயலவர்கள் முஸ்லிம் அல்லாதவர்களாக இருந்தாலும், அவர்களுடனும் நல்லுறவைப் பேணல் வேண்டும்.
- இஸ்லாம் கூறும் சமூக உறவுகளைப் பேணி நடக்க வேண்டும்.

அல்லாஹ், மனிதனின் நல்வாழ்வுக்காக அல்குர்ஆனை இவ்வுலகில் இறக்கி வைத்தான். இதனூடாக ஒரு சீரான சமூக அமைப்பை உருவாக்கித் தந்தான். அந்த சமூக அமைப்பைப் பின்பற்றுபவர்களே முஸ்லிம்களாவர். அவர்கள் ஒரு உடலைப் போன்று இணைந்து வாழ்பவர்கள். இதனை "மேலும் அல்லாஹ்வையே வணங்குங்கள். அவனுக்கு யாதொன்றையும் இணையாக்காதீர்கள்!. பெற்றோருக்கு உபகாரம் செய்யுங்கள். அவ்வாறே உறவினர்களுக்கும், அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும், உறவினரான அண்டை வீட்டினருக்கும், அந்நியரான அண்டை வீட்டினருக்கும் (அன்புடன் உபகாரம் செய்யுங்கள்)". (ஸூரா அந் நிஸா: 36) என்று அல் குர்ஆன் எடுத்துக்காட்டுகிறது.

தாய் தந்தையர், சகோதர சகோதரிகள், தாய்வழி உறவினர்கள், தந்தை வழி உறவினர்கள், திருமண பந்தத்தின் மூலம் வரும் உறவினர்கள், ஆகியோருடன் நல்ல முறையில் நடக்குமாறும், உறவைப் பேணிக் கொள்ளுமாறும் இஸ்லாம் கட்டளையிடுகின்றது.

உறவுகளைப் பேணுதல் சுவர்க்கவாதிகளின் பண்பு என்று கூறும் இஸ்லாம், உறவுகளைப் பேணாது அதனைத் துண்டித்து வாழ்பவன் சுவனம் செல்ல முடியாது எனவும் எச்சரிக்கின்றது. இதுபற்றி அல்குர்-ஆன்


இலவச விநியோகத்திற்காக

“மனிதர்களே! இனபந்துக்களை (துண்டித்து விடுவதை)யும் நீங்கள் அஞ்சிக்கொள்ளுங்கள்” எனக் கூறுகிறது (ஸூரா அந்நிஸா - 01)

## உறவினர்களைப் பேணுவோம்

மேலும் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் “உறவுகளைத் துண்டித்துக் கொள்ளாதீர்கள். ஒருவருக்கொருவர் பகைமையை வளர்த்துவிடும் விடயங்களில் ஈடுபடாதீர்கள். ஒருவருக்கொருவர் கோபத்தையும், காழ்ப்புணர்வையும் (பொறாமை) வளர்த்துக் கொள்ளாதீர்கள். நீங்கள் உங்களுக்கிடையில் சகோதரர்களாக இருங்கள்” (புகாரி)

என உறவுகளைப் பேணும் விடயங்களைத் தெளிவுபடுத்தி இருக்கிறார்கள். எனவே, எங்களுக்கு மத்தியில் ஏற்படும் பிரச்சினைகளை இனங்கண்டு, சரியான தீர்வுகளைக் காண்பதன் மூலம் உறவுகளைப் பேணிக்கொள்ள முடியும்.

## அயவலர்களுடன் அன்பாகப் பழகுவோம்

உறவினர்களுக்கு அடுத்தபடியாக அயலவர்களுடன் நடந்து கொள்ளும் முறை பற்றி இஸ்லாம் அழகாகக் கூறியுள்ளது. இஸ்லாத்தின் பார்வையில் அயலவர்கள் மூன்று வகைப்படுவார்கள்.

1. உறவினர்களாக உள்ள முஸ்லிம் அண்டை வீட்டார்.
2. உறவினர்கள் அல்லாத முஸ்லிம் அண்டை வீட்டார்.
3. முஸ்லிம் அல்லாத அண்டை வீட்டார்.

மேற்குறிப்பிட்ட அயலவர்களுடன் சகோதரத்துவ உணர்வு, அன்பு, பாசம், நீதி, நேர்மை போன்ற பண்புகளுடன் நடந்து கொள்ள வேண்டும். அயலவர்கள் விடயத்தில் நடந்து கொள்ள வேண்டிய முறைகள் பற்றி அநேகமான ஹதீஸ்கள் வந்துள்ளன.

“எவனுடைய தொல்லைகளிலிருந்து அவனது அண்டை வீட்டான் பாதுகாப்புப் பெறவில்லையோ அத்தகையவன் நம்பிக்கை கொண்டவனல்ல” என ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (புகாரி)

ஒரு முஸ்லிம் அயலவர்களுடன் நடந்து கொள்ளும் முறை பற்றி ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் போதித்த விடயங்களைத் தொகுத்து நோக்குவோம்.

- ✡ அயல் வீட்டார் தேவையுடையவராக இருந்தால் அவரது தேவையைப் பூர்த்தி செய்தல்.
- ✡ அவர் நோய்வாய்ப்பட்டிருந்தால் அவரை நோய் விசாரிக்கச் செல்லல்.
- ✡ அவர் கடன் கேட்டால் அதனை நிறைவேற்றல்.
- ✡ அவருக்கு மகிழ்ச்சி ஏற்பட்டால் அவரைப் பாராட்டுவதும், துன்பம் ஏற்பட்டால் ஆறுதல் கூறுவதும்.
- ✡ அயலவர்களின் சேமநலத்தைப் பாதிக்கும் முறையில் நடந்து கொள்ளாதிருத்தல்.
- ✡ வீட்டில் சமைக்கப்படும் உணவில் சிறு பகுதியையேனும் அண்டை வீட்டாருக்கும் கொடுத்தல்.
- ✡ எமது சிறுவர்களுக்காக வாங்கும் இனிப்புக்கள், பழவகைகள் போன்றவற்றைப் பக்கத்து வீட்டுச் சிறுவர்களுக்கும் கொடுத்து மகிழ்தல்.
- ✡ அயலவர் சிரமப்படும் வகையில் எதனையும் செய்யாதிருத்தல் (குப்பை கொட்டுதல், அழுக்கு நீரை ஊற்றுதல், ஒலியெழுப்புதல், ஒளி வருவதைத் தடை செய்தல்).
- ✡ அயலவர் வீட்டுக்குக் காற்று வரும் வழியைத் தடுக்காதிருத்தல்.

சுருக்கமாக நோக்கின், அண்டை அயலாவர் எல்லோருடனும் அன்பாகவும், பரஸ்பரம் நல்லுறவுடனும் நடந்து கொள்ள வேண்டும். ஒருவர் தன் உயிர், பொருள் மானம், சொத்து என்பவைகளைப் பாதுகாக்கும் அளவிற்கு அயலவர்களது உயிர், பொருள், மானம், சொத்து என்பவைகளையும் பாதுகாக்க வேண்டும். எனவே, இஸ்லாம் போதிக்கும் உயர்ந்த பண்புகளை எம்மில் வளர்த்துக் கொள்வோமாக.


இலவச விநியோகத்திற்காக

## பயிற்சிகள்

### பின்வரும் இடைவெளிகளைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக

1. உறவினர்களைத் துண்டித்து நடப்பவன் ............................... நுழையமாட்டான்.
2. உறவினர்களைத் ..................... நடப்பதைப் பயந்து கொள்ளுமாறு அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான்.
3. பூமியில் மனிதன் சீராக வாழ்வதற்கே ............................... இறக்கப்பட்டது.
4. அயலவர் ............................. வகைப்படுவார்கள்.

**சுருக்க விடை தருக**

1. உறவினர்களுடன் நடந்து கொள்ளும் முறை பற்றிக் குறிப்பிட்டுள்ள ஹதீஸ்கள் சிலவற்றைத் தொகுத்து எழுதுக.
2. அயலவர்களை வகைப்படுத்திக் காட்டுக.
3. அயலவருடன் நடந்துகொள்ளும் முறைகளைப் பட்டியற்படுத்துக.

## 4:2:1 நல்ல பிள்ளைகளாக வாழ்வோம்

- பெற்றோர், மூத்தோர், ஆசிரியர்கள், சமயத் தலைவர்கள் முதலானோர் கண்ணியப்படுத்தப்பட வேண்டியவர்கள்.
- உண்மை, நேர்மை, வாக்கு மீறாமை போன்ற நற்பண்புகளைக் கொண்டவர்களாக வாழ்தல் வேண்டும்.
- ஓய்வு பயனுள்ள முறையில் கழிக்கப்பட வேண்டியதாகும்.
- இரு பெருநாட்களையும் அல்லாஹ் விரும்பும் வகையில் கழித்தல் வேண்டும்.



இஸ்லாம் நற்பண்புகளை வலியுறுத்தும் மார்க்கமாகும். நற்பண்புகள் ஈமானின் அரைப் பகுதி என இஸ்லாம் கூறுகிறது. நற்பண்புடையோர் இம்மையிலும், மறுமையிலும் வெற்றி பெறுவர். நற்பண்புகளைப் போதிப்பதும் நபிமார்களின் பணியாக இருந்தது. இதனால் தான் "நற்பண்புகளைப் பூரணப்படுத்துவதற்காகவே நான் அனுப்பப்பட்டுள்ளேன்" என்று நபி ஸல்லல்லஹு அனலஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்.

ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தானும் நற்பண்புடையவராக இருந்ததோடு நற்பண்புகளுடைய முன்மாதிரியான ஒரு சமூகத்தையும் உருவாக்கிச் சென்றுள்ளார்கள். அச் சமுதாயத்திடம் உண்மை, நேர்மை, கற்பு, தூய்மை, சகோதரத்துவம் போன்ற நற்பண்புகள் காணப்பட்டன. அவர்கள் நல்ல பண்புகளில் ஆர்வம் காட்டக் கூடியவர்களாக இருந்தார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தோழர்களான ஸஹாபாக்களைப் போன்றே நாமும் நற்பண்புகளைக் கடைப்பிடித்து வாழ முயற்சி செய்ய வேண்டும். வாழ்பவர்களாக மாற வேண்டும். அப்போது தான் அவர்களைப் போன்று நாமும் இறை திருப்தியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

பின்வரும் நற்பண்புகளைக் கடைபிடிப்பதன் மூலம் நாம் உயர்வடையலாம்:

- பெற்றோரின் வார்த்தைகளை மதித்து அவர்களுக்குக் கட்டுப்படுதல்.
- எமது உடன் பிறப்புக்களுடன் அன்பாகவும், பரஸ்பரம் நல்லுறவுடனும் நடந்து கொள்ளல்.
- உறவினர்களுடன் சேர்ந்து வாழ்தல்.
- அயலவர்களுடன் நல்லுறவைப் பேணுதல்.
- வீட்டில் நுழையும்போது ஸலாம் கூறி நுழைதல்.
- மூத்தோரைக் கண்ணியப்படுத்தல், சிறியோர் மீது இரக்கம் காட்டல்.
- தினமும் அல்குர்ஆனை ஓதுதல். அதனை விளங்க முயற்சித்தல்.
- சந்தர்ப்ப துஆக்களை வழக்கமாக்கிக் கொள்ளல்
- வீட்டில் வாழும் பிராணிகளுட்பட அனைவருடனும் அன்பாக நடந்து கொள்ளல்.
- கோபம், பொறாமை, வஞ்சகம், சுயநலம், பெருமை, வாக்கு மீறல் போன்ற தீய பண்புகளிலிருந்து விலகிக் கொள்ளல்.
- வீட்டையும், வீட்டின் சுற்றுப்புறங்களையும் சுத்தமாக வைத்திருத்தல்.
- வீட்டுக்கு வரும் விருந்தினர்களை உபசரித்து கண்ணியப்படுத்தல்.

## பெருநாட்களைப் பயன்படுத்தல்

- ✡ பெருநாளன்று தொழுகையை முடித்த பின்னர் பெற்றோர், உறவினர்கள், அயலவர்கள் ஆகியோரின் வீடுகளுக்குச் சென்று, அவர்களுக்கு வாழ்த்துக் கூறல்
- ✡ அல்லாஹ் உங்களதும், எங்களதும் நற்கிரியைகளை அங்கீகரிப் பானாக என்று வாழ்த்தில் சேர்த்துக்கொள்ளல்.
- ✡ குடும்ப உறவினர்கள், ஏழைகள், அனாதைகள் முதலானோரின் தேவைகளை அறிந்து, அவர்களுக்கு உதவி செய்தல்.
- ✡ நோயாளிகள், வலதுகுறைந்தோர் போன்ற நலிவுற்றோர்களிடம் சென்று நலம் விசாரித்து, நன்கொடைகளை வழங்குதல்.
- ✡ வீணான பொழுதுபோக்குகள், களியாட்டங்கள், கேளிக்கைகள் என்பவற்றிலிருந்து முற்றாகத் தவிர்ந்து கொள்ளல்.
- ✡ பெற்றோர், உறவினர்கள், நண்பர்கள். அயலவர்கள் ஆகியோருடன் பகைமை கொண்டிருந்தால், அதனை நீக்கி, மீண்டும் உறவுகளைப் புதுப்பித்துக் கொள்ளல்.

எமது நல்ல முன்மாதிரிகளும், வழிகாட்டல்களும் இளைய சகோதரர்களை நல்லவர்களாக மாற்றுவதற்குத் துணை செய்கின்றது. ஆகவே, நற்பண்புகளைக் கைக்கொண்டு, நல்ல முஸ்லிமாக வாழ்வதற்குக் கற்றுக்கொள்வோமாக.

## பயிற்சிகள்

(1) ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நற்பண்புகள் பற்றிக் கூறியுள்ள ஹதீஸ் ஒன்றை எழுதுக.

(2) பெற்றோருக்கு நாம் செய்ய வேண்டிய ஐந்து கடமைகளைக் குறித்துக்காட்டுக.

(3) நாம் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய ஐந்து நற்குணங்களைக் குறிப்பிடுக.

(4) இரு பெருநாட்களிலும் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குமுறைகளைக் குறிப்பிடுக.

**செயற்பாடு**

**லுக்மான் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தனது மகனுக்குக் கூறிய உபதேசங்களைக் குர்ஆன் மொழிபெயர்ப்பிலிருந்து தொகுத்து எழுதுக.**


இலவச விநியோகத்திற்காக